MC.57/2025

05.05.2026

Pw1 – சரளா, க/பெ.ரஜினி, வயது–35

எதிர்மனுதாரர் ஆஜர் இல்லை.

விசாரணை தொடங்கப்பட்ட நேரம் –12.40 P.M

விசாரணை முடிக்கப்பட்டநேரம் –12.50 P.M

Solemnly affirmed by Selvi.M.K.Anusha,M.L., Chief Judicial Magistrate, Tirupathur in accordance with the provision of Act X of 1873 of the day of 05.05.2026

எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:-

எதிர்மனுதாரர் உங்களுடைய தாய்மாமன் உறவு என்றால் சரிதான். எதிர்மனுதாரர் உங்களுடன் சேர்ந்து வாழ தயாராக உள்ளார் எனவும் நீங்கள் தயாராக உள்ளீர்களா என்றால் இல்லை எதிர்மனுதாரருக்கு வேறு ஒரு நபருடன் திருமணம் ஆகிவிட்டது. உங்கள் முதல் விசாரணை சாட்சியத்தில் திருமண செலவுகள் மற்றும் 10 சவரன் நகைகள், இருசக்கர வாகனம், சீர்வரிசை ஆகியவைகள் எதிர்மனுதாரருக்கு உங்கள் பெற்றோர் செலவு செய்ததாக சொல்லுவது தவறு என்று சொன்னால் உண்மை சங்கதியை தான் நான் சொல்லுகிறேன். எதிர்மனுதாரருக்கு நீங்கள் அக்கா மகள் என்ற காரணத்தினால் சீர்வரிசை எதுவும் இல்லாமல் உங்களை அவருடைய சொந்த செலவில் திருமணம் செய்துகொண்டார் என்று சொன்னால் சரியல்ல. உங்கள் முதல் விசாரணை சாட்சியத்தில் உங்கள் திருமணத்திற்கு பின்னிட்டு எதிர்மனுதாரர் பெங்களூரில் வசிக்கும் அண்ணன் வீட்டில்

உங்களை தங்க வைத்ததாக செல்லியுள்ளீர்கள் என்றால் சரிதான். எதிர்மனுதாரர் பெங்களூரில் கூலி வேலை செய்ததாக முதல் விசாரணையில் சொல்லியுள்ளீர்கள் என்று சொன்னால் சரிதான். முதலில் கூலி வேலை செய்துகொண்டிருந்தார் அதன் பிறகு தனியார் நிறுவனத்தில் நல்ல பணியில் இருந்து வருகிறார்.

(வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.)

Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/her to be Correct.

M K ANUSHA

Chief Judicial Magistrate
Digitally signed by M K ANUSHA
DN: cn=M K ANUSHA, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: Tirupathur
Date: 2026.05.05 17:16:14 +0530

Chief Judicial Magistrate,
Tirupathur.